**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –6**

**பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு – மார்ச் / ஏப்ரல் 2025**

**அறிவியல் (தமிழ் வழி)**

**விடைக்குறிப்புகள்**

**மொத்த மதிப்பெண்கள் :75**

## பகுதி – I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 12 x 1 = 12

| வினா எண் | குறியீடு | விடை | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1. | (இ) | $98 \times 10^4$ டைன் | 1 |
| 2. | (ஈ) | இரு குவிய லென்சு | 1 |
| 3. | (ஆ) | 10 வோல்ட் | 1 |
| 4. | (ஆ) | ஐரின் கியூரி | 1 |
| 5. | (ஆ) | Hg | 1 |
| 6. | (ஆ) | அதிகரிக்கிறது | 1 |
| 7. | (இ) | $1 \times 10^{-11}$ M | 1 |
| 8. | (ஆ) | எத்தனால் எரிதல் | 1 |
| 9. | (ஈ) | அகத்தோல் | 1 |
| 10. | (ஆ) | மெட்டாசென்ட்ரிக் | 1 |
| 11. | (அ) | டிசம்பர் 1 | 1 |
| 12. | (ஈ) | Scratch | 1 |

## பகுதி – II

**ஏதேனும் ஏழு வினாக்ளுக்கு விடையளிக்கவும்.**

வினா எண்.22க்கு கட்டாயம் விடையளிக்கவும் 7 x 2 = 14

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 13. | ஒரு கிராம் நிறையுள்ள நீரின் வெப்பநிலையை $1^0C$ உயர்த்தத் தேவைப்படும் வெப்ப ஆற்றலின் அளவு ஒரு கலோரி என வரையறுக்கப்படுகிறது. | 2 |
| 14. | ஒரு ஊடகத்தில் ஒலியலை பரவும் திசையிலே துகள்கள் அதிர்வுற்றால் அது நெட்டலை எனப்படும். | 2 |
| 15. | • ஈரப்பதம் (ஈரக்காற்று)<br>• நீர்<br>• ஆக்ஸிஜன் **(ஏதேனும் இரண்டு)** | 2 |
| 16. | பொருத்துக<br>1. வினைச்செயல் தொகுதி –OH – ஆல்கஹால்<br>2. பல்லின வளையச் சேர்மங்கள் – பியூரான்<br>3. நிறைவுறா சேர்மங்கள் – ஈத்தீன்<br>4. சோப்பு – பொட்டாசியம் ஸ்டியரேட்<br>5. கார்போ வளையச் சேர்மங்கள் – பென்சீன்<br>**(ஏதேனும் நான்கு)** | 2 |

| | | |
|---|---|---|
| 17. | • இரத்த ஓட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கு உதவுகின்றது.<br>• இரத்தம் ஒரே திசையில் செல்வதையும் மற்றும் பின்னோக்கி வருவதை தடுக்கவும் உதவுகிறது. | 1<br>1 |
| 18. | • நெருங்கிய இலையடுக்கம் கொண்ட தாவரங்களில் **திடீரென தண்டு நீட்சியடைவதும்**, அதன் தொடர்ச்சியாக மலர்தலும் நிகழ்வதற்கு போல்டிங் என்று பெயர்.<br>• **ஜிப்ரல்லின்களைத்** தெளிப்பதன் மூலம் போல்டிங்கை செயற்கையாக ஊக்குவிக்கலாம்.<br>(அல்லது)<br>நெருங்கிய இலையடுக்கம் கொண்ட தாவரங்களின் மீது **ஜிப்ரல்லின்களைத்** தெளிக்கும் போது, **திடீரென தண்டு நீட்சியடைவதும்** அதன் தொடர்ச்சியாக மலர்தலும் நிகழ்கின்றன. இதற்கு போல்டிங் என்று பெயர். | 1<br>1<br>2 |
| 19. | A – எக்ஸைன் (அ) வெளியுறை<br>B – இன்டைன் (அ) உள்ளுறை<br>C – உற்பத்தி செல்<br>D – உடல் உட்கரு | 4x ½=2 |
| 20. | • கிவி பறவை இறக்கைகளை நீண்ட காலமாக பறப்பதற்கு **பயன்படுத்தவில்லை.**<br>• **பயன்பாடு மற்றும் பயன்படுத்தாமை கோட்பாட்டின்** படி கிவி பறவையின் இறக்கை சிதைவடைந்தது. | 1<br>1 |
| 21. | • பெருவெள்ளம்<br>• வறட்சி<br>• மண்ணரிப்பு<br>• வன உயிரிகள் அழிப்பு<br>• அருகி வரும் சிற்றினங்கள் முற்றிலுமாக அழிதல்<br>• உயிர்புவி சுழற்சியில் சமமற்ற நிலை<br>• பருவநிலை மாற்றம்<br>• பாலைவனமாதல்<br>**(ஏதேனும் இரண்டு)** | 2 |
| 22. | மீத்தேனின் ($CH_4$) மூலக்கூறு நிறை = **12+4 = 16 கி**<br>கார்பனின் (C) சதவீத இயைபு = $\frac{12}{16}$ **x 100 = 75%**<br>ஹைட்ரஜனின் (H) சதவீத இயைபு = $\frac{4}{16}$ **x 100 = 25%** | 1<br>½<br>½ |

## பகுதி – III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு** விடையளிக்கவும்.

வினா எண்.**32**க்கு கட்டாயம் விடையளிக்கவும் **7 x 4 = 28**

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| **23.** | இவ்வாயு, பாயில் விதி, சார்லஸ் விதி மற்றும் அவகேட்ரோ விதிகளுக்கு உட்படும்<br>பாயில் விதிப்படி<br>PV = மாறிலி ⟶ 1<br>சார்லஸ் விதிப்படி<br>V/T = மாறிலி ⟶ 2<br>அவகேட்ரோ விதிப்படி<br>V/n = மாறிலி ⟶ 3<br>சமன்பாடு **1 ,2** மற்றும் **3** சமன்பாடுகளிலிருந்து<br>PV/nT = மாறிலி ⟶ 4<br><br>இந்த மதிப்பை சமன்பாடு **4–** ல் பிரதியிட<br>அதாவது $n = \mu(N_A)$ ⟶ 5<br>சமன்பாடு **5**ஐ சமன்பாடு **4**ல் பிரதியிட<br>$PV/\mu N_A T$ = மாறிலி<br><br>இந்த மாறிலி போல்ட்ஸ்மேன் மாறிலி<br><br>($K_B = 1.381 \times 10^{-23} JK^{-1}$) என அழைக்கப்படுகிறது.<br>$PV/\mu N_A T = K_B$<br>$PV=\mu N_A K_B T$<br>இங்கு $\mu N_A K_B = R$ இது பொது வாயு மாறிலி என அழைக்கப்படும்.<br>இதன் மதிப்பு **8.31** $JMol^{-1} k^{-1}$<br><br>**PV = RT**<br><br>இது நல்லியல்பு வாயுச் சமன்பாடு (அல்லது) வாயுக்களின் நிலைச்சமன்பாடு எனவும் அழைக்கப்படுகிறது. | 2<br>(3 விதிகள்)<br><br>1<br>(பிரதியிடுதல்)<br><br>1<br>(முடிவு) |

**24.**

| | கிட்டப்பார்வை | தூரப்பார்வை |
|---|---|---|
| i) | மையோபியா எனப்படும் | ஹைப்பர் மெட்ரோபியா எனப்படும். |
| ii) | விழிக்கோளம் சிறிது நீண்டு விடுவதால் ஏற்படும் | விழிக்கோளம் சுருங்குவதால் ஏற்படும் |
| iii) | அருகிலுள்ள பொருட்களைத் தெளிவாகக் காண முடியும் | தொலைவிலுள்ள பொருட்களைத் தெளிவாகக் காண முடியும் |
| iv) | தொலைவிலுள்ள பொருட்களை தெளிவாக காண முடியாது | அருகிலுள்ள பொருட்களை தெளிவாக காண முடியாது |
| v) | விழி லென்சிற்கும் விழித் திரைக்குமுள்ள தொலைவு அதிகரிப்பதால் ஏற்படுகிறது | விழி லென்சிற்கும் விழித் திரைக்குமுள்ள தொலைவு குறைவதால் ஏற்படுகிறது |
| vi) | பிம்பம் விழித்திரைக்கு முன்பாக உருவாக்கப்படுகிறது. | பிம்பம் விழித்திரைக்கு பின்புறம் உருவாக்கப்படுகிறது. |
| vii) | தகுந்த குழிலென்சை பயன்படுத்தி சரி செய்யலாம் | தகுந்த குவிலென்சை பயன்படுத்தி சரி செய்யலாம் |
| viii | விழிலென்சின் குவியதூரம் குறைகிறது | விழிலென்சின் குவியதூரம் அதிகரிக்கிறது. |

**(ஏதேனும் நான்கு)**

4

**25.**

| பண்புகள் | ஆல்பா (α) கதிர்கள் | பீட்டா (β) கதிர்கள் | காமா (γ) கதிர்கள் |
|---|---|---|---|
| தன்மை | இரண்டு புரோட்டான்கள் மற்றும் இரண்டு நியூட்ரான்கள் கொண்ட ஹீலியம் அணுவின் உட்கரு ($_2He^4$) ஆகும் | இவை அனைத்து அணுக்களிலும் காணப்படும் அடிப்படைத் துகள்களான எலக்ட்ரான்கள் ஆகும் ($_{-1}e^0$) | இவை ஃபோட்டான்கள் எனப்படும் மின்காந்த அலைகளாகும் |
| மின்சுமை | இவை நேர்மின் சுமை கொண்ட துகள்கள் ஆகும். ஒவ்வொரு ஆல்பாத்துகளின் மின்சுமை = +2e | இவை எதிர்மின் சுமை கொண்ட துகள்கள் ஆகும் பீட்டாத் துகளின் மின்சுமை = –e | இவை மின்சுமையற்றவை (அ) நடுநிலைத்துகள் காமாத்துகளின் மின்சுமை = சுழி |
| அயனியாக்கும் திறன் | ஆல்பாத்துகளின் அயனியாக்கும் திறன் பீட்டாத் துகள்களை விட 100 மடங்கும், காமாத் துகள்களை விட 10,000 மடங்கும் அதிகம் | இதன் அயனியாக்கும் திறன் மிகவும் குறைவு | ஒப்பீட்டளவில் மிகவும் குறைந்த அயனியாக்கும் திறன் பெற்றவை |
| ஊடுருவும் திறன் | மிகவும் குறைந்த ஊடுருவும் திறன் உடையது. (அதாவது | ஆல்பாக் கதிர்களை விட அதிக ஊடுருவும் | பீட்டாக் கதிர்களை விட மிக அதிக |

4

| | | | |
|---|---|---|---|
| | தடிமனான தாளைக் கொண்டு இவற்றைத் தடுத்து விட முடியும்) | திறன் கொண்டவை (மெல்லிய தகட்டின் வழியே இவை ஊடுருவிச் செல்லும்) | ஊடுருவும் திறன் கொண்டவை (தடிமனான உலோகங்களின் வழியே ஊடுருவிச் செல்லும்) |
| மின் மற்றும் காந்தப் புலங்களால் ஏற்படும் விளைவு | மின் மற்றும் காந்த புலங்களால் விலக்கமடையும் (ஃப்ளமிங் இடக்கை விதிப்படி) | மின் மற்றும் காந்த புலங்களால் விலக்கமடையும் ஆனால் ஆல்பாத் துகள்கள் விலகலடையும் திசைக்கு எதிரான திசையில் விலகலடையும் (ஃப்ளமிங் இடக்கை விதிப்படி) | மின் மற்றும் காந்தப் புலங்களால் விலகலடையாது |
| திசைவேகம் | ஒளியின் திசைவேகத்தில் 1/10 முதல் 1/20 மடங்கு வரையிலான திசைவேகத்தில் செல்லும் | ஒளியின் திசைவேகத்தில் 9/10 மடங்கு திசைவேகத்தில் செல்லும் | ஒளியின் திசைவேகத்தில் செல்லும் |

**(ஏதேனும் நான்கு)**

**26. அவகேட்ரோ விதியின் பயன்பாடுகள்**

- கே–லூசாக் விதியினை விவரிக்கிறது.
- வாயுக்களின் அணுக்கட்டு எண்ணைக் கணக்கிட உதவுகிறது.
- வாயுக்களின் மூலக்கூறு வாய்ப்பாட்டை கணக்கிட உதவுகிறது.
- மூலக்கூறு நிறைக்கும், ஆவி அடர்த்திக்கும் உள்ள தொடர்பை வருவிக்க உதவுகிறது.
- அனைத்து வாயுக்களின் கிராம் மோலார் பருமனை (22.4 லிட்டர் திட்ட வெப்ப அழுத்த நிலையில்) கணக்கிட பயன்படுகிறது.

**(ஏதேனும் நான்கு)**

4

**27. (i) <u>உலோகக் கலவை</u>**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உலோகங்கள் அல்லது உலோகங்களும் அலோகங்களும் சேர்ந்த ஒரு படித்தான கலவையே உலோகக் கலவை ஆகும்.


2

**(ii) <u>உலோகக் கலவை உருவாக்குவதற்கான காரணங்கள்</u>**

- நிறம் மற்றும் வடிவங்களை மாற்றியமைக்க
- வேதிப்பண்புகளை மாற்றியமைக்க
- உருகுநிலையைக் குறைக்க
- கடினத்தன்மை மற்றும் இழுவிசையை அதிகரிக்க
- மின்தடையை அதிகரிக்க

**(ஏதேனும் இரண்டு காரணங்கள்)**

2


| | | |
|---|---|---|
| 28. | ஒரு சோப்பு மூலக்கூறு வேறுபட்ட இரு வேதிப் பகுதிகளை கொண்டுள்ளது<br>• ஒரு முனை சிறிய தலை போன்ற கார்பாக்சிலேட் தொகுதி கொண்ட முனைவுள்ள பகுதி (நீரை விரும்பும் பகுதி)<br>• மறு முனை பெரிய வால் போன்ற நீளமான ஹைட்ரோ கார்பன் சங்கிலி தொடருடைய முனைவற்ற பகுதி (நீரை வெறுக்கும் பகுதி)<br><u>தூய்மையாக்கும் முறை :</u><br>• நீரை வெறுக்கும் பகுதி மாசினை அடக்கி கொள்ளும்<br>• நீரை விரும்பும் பகுதி மொத்த மூலக்கூறையும் நீரில் கரையச் செய்யும்<br>• சோப்பு (அல்லது) டிடர்ஜெண்டை நீரில் கரைக்கும் போது மூலக்கூறுகள் ஒன்றாக இணைந்த கொத்துகளாக மீசெல்ஸ் உருவாகிறது.<br>• இந்த மீசெல்ஸ் கொத்தில் அழுக்கு, எண்ணெய் ஒட்டிக் கொள்கிறது<br>• சோப்பின் கார்பாக்சிலேட் தொகுதி கொத்துக்களை நீரில் கரைய செய்யும். அழுக்கு நீக்கப்படுகிறது. | 2<br><br>2 |
| 29. | <u>அட்டை இரண்டு முறைகளில் இடப்பெயர்ச்சி செய்கிறது</u><br>1) வளைதல் அல்லது ஊர்தல் முறை<br>2) நீந்துதல் முறை<br>**1) <u>வளைதல் அல்லது ஊர்தல் முறை</u>**<br>• இது தசைகளின் சுருக்கம் மற்றும் நீள்தல் மூலம் நடைபெறுகிறது.<br>• இயக்கத்தின் போது ஒட்டிக் கொள்ள இரு ஒட்டுறிஞ்சிகளும் உதவுகின்றன<br>**2) <u>நீந்துதல் முறை</u>**<br>• அட்டை நீரில் மிகுந்த செயலாக்கத்துடன் நீந்தி அலை இயக்கத்தை மேற்கொள்கிறது. | 2<br><br>2 |
| 30. | <br>நியூரான் அமைப்பு<br><u>நியூரான் மூன்று பகுதிகளை உடையது</u><br>1. சைட்டான்<br>2. டெண்ட்ரைட்டுகள்<br>3. ஆக்சான்<br><u>சைட்டான்</u><br>• செல் உடலம் அல்லது பெரிகேரியோன் என்று அழைக்கப்படுகிறது<br>• மைய உட்கருவில் சைட்டோபிளாசம் நிரம்பியுள்ள பகுதி நியூரோ பிளாசம் என்று அழைக்கப்படுகிறது. | 2 |

| | | |
|---|---|---|
| | • இதனுள் பெரிய துகள்கள் நிரம்பியுள்ளன இதற்கு நிசில் துகள்கள் எனப்படுகின்றன.<br>• செல் நுண்ணுறுப்புகளாக மைட்டோகாண்ட்ரியா, ரிபோசோம்கள், லைசோசோம்கள் மற்றும் எண்டோபிளாசா வலைப்பின்னல் ஆகியவை சைட்டோபிளாசத்தில் உள்ளன.<br>• நியூரான்கள் பகுப்படையும் திறன் அற்றவை<br>• சைட்டோ பிளாசத்தினுள்ளே பல நுண் இழைகள் காணப்படுகின்றன. இவை நரம்பு தூண்டல்களை முன்னும், பின்னும் கடத்துவதற்கு உதவுகின்றன.<br><u>டெண்ட்ரைட்டுகள்</u><br>• செல் உடலத்திற்கு வெளிப்புறமாக பல்வேறு கிளைத்த பகுதிகள் காணப்படுகின்றன.<br>• நரம்புத் தூண்டல்களை சைட்டானை நோக்கிக் கடத்துகின்றன.<br>• நரம்பு செல்களில் இருந்து பெறப்படும் தகவல்களை உள்வாங்கி கொள்கின்றன.<br><u>ஆக்சான்</u><br>• தனித்த, நீளமான மெல்லிய அமைப்பு ஆகும். ஆக்சானின் முடிவுப்பகுதி நுண்ணிய குமிழ் போன்று ''சினாப்டிக் குமிழ்'' பகுதிகளாக முடிவடைகின்றது.<br>• ஆக்சானின் பிளாஸ்மா சவ்வு ஆக்ஸோலெம்மா என்றும் சைட்டோபிளாசம் ஆக்ஸோபிளாசம் என்றும் அழைக்கப்படும்.<br>• தூண்டல்களை சைட்டானில் இருந்து எடுத்துச் செல்கின்றன. ஆக்ஸாலின் மேற்புறம் உள்ள உரை மையலின் உறை ஆகும். இவற்றின் மேற்புறம் ஸ்வான் செல்களால் ஆன உறை பாதுகாக்கிறது.<br>• மையலின் உறை தொடர்ச்சியாக இல்லாமல் இடைவெளிகளுடன் உள்ளது. இதற்கு ரேன்வீரின் கணுக்கள் என்று பெயர். இரு கணுக்களுக்கு இடையே உள்ள இடைவெளி கணுவிடைப்பகுதியாகும்.<br>• நரம்புத்தூண்டல்களை விரைவாக கடத்துகிறது. | 2 |
| **31. (i)**<br><br><br><br><br>**(ii)** | <u>**மண்ணரிப்பின் விளைவுகள்**</u><br>• மண்ணின் மட்கு மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடித்து செல்லப்படும்.<br>• மண் வளம் குறைகிறது.<br><br><u>**மண்ணரிப்பை தடுத்தல்**</u><br>• தாவரப்பரப்பை நிலை நிறுத்திக் கொள்ளல்.<br>• கால்நடைகளின் அதிக மேய்ச்சலை கட்டுப்படுத்துதல்.<br>• பயிற்சுழற்சி மண்வள மேலாண்மை மேம்படுத்துதல்.<br>• நிலப்பரப்பில் ஓடும் நீரினை சேமித்தல்.<br>• காடுகள் உருவாக்கம், மலைகளில் நிலத்தை சமப்படுத்துதல், நீரோட்டத்திற்கு எதிர்திசையில் மண் உழுதல்.<br>• காற்றின் வேகத்தை மட்டுப்படுத்த அதிக பரப்பில் மரங்கள் நடுதல்.<br>**(ஏதேனும் இரண்டு)** | 2<br><br><br><br><br>2 |

| | | |
|---|---|---|
| **32.** | $n^{l} = \left(\frac{V}{V-V_s}\right) n$ | 1 |
| | $= \left(\frac{V}{V-(1/10)v}\right) n$ | 2 |
| | $= \left(\frac{10}{9}\right) n$ | |
| | $= \left(\frac{10}{9}\right) \times 90$ | |
| | **$n^{l}$ = 100 Hz** | 1 |

## பகுதி – IV

**அனைத்து வினாக்ளுக்கும் விடையளிக்கவும்.**
**தேவையான இடங்களில் படம் வரையவும்.** 3x 7 = 21

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 33.அ (i) | <u>**விதி**</u><br>புறவிசை ஏதும் தாக்காத வரையில் ஒரு பொருள் (அ) ஓர் அமைப்பின் மீது செயல்படும் மொத்த நேர்க்கோட்டு உந்தம் மாறாமல் இருக்கும். | 2 |
| |  | 1 |
| | <u>**மெய்ப்பித்தல்**</u><br>• A மற்றும் B என்ற இரு பொருட்களின் நிறைகள் முறையே m1 மற்றும் m2 என்க. அவை $u_1$ மற்றும் $u_2$ என்ற ஆரம்ப திசைவேகளில் நேர்கோட்டில் பயணிப்பதாக கொள்வோம்.<br>• பொருள் A ஆனது B ஐ விட அதிக திசைவேகத்தில் செல்வதாக கருதுவோம் ($u_1>u_2$).<br>• ‘t’ என்ற கால இடைவெளியில் பொருள் A ஆனது B மீது மோதலை ஏற்படுத்துகிறது.<br>• மோதலுக்குப் பிறகு அப்பொருள்கள் அதே நேர்கோட்டில் $v_1$ மற்றும் $v_2$ திசைவேகத்தில் பயணிப்பதாகக் கொள்வோம். | 2 |

| | | |
|---|---|---|
| | நியூட்டனின் இரண்டாம் விதிப்படி<br>B யின் மீது A செயல்படுத்தும் விசை<br>$F_A = m_2 \frac{(v_2-u_2)}{t}$<br>A யின் மீது B செயல்படுத்தும் விசை<br>$F_B = m_1 \frac{(v_1-u_1)}{t}$<br>நியூட்டனின் மூன்றாம் விதிப்படி Aயின் மீது செயல்படும் விசையானது B யின் மீது செயல்படும் எதிர்விசைக்கு சமம்<br>விசை = எதிர்விசை<br>$F_B = - F_A$<br>$m_1 \frac{(v_1-u_1)}{t} = -m_2 \frac{(v_2-u_2)}{t}$<br>$m_1v_1 + m_2v_2 = m_1u_1 + m_2 u_2$ | |
| **(ii)** | <u>திருப்புத்திறன் தத்துவம்</u><br>சமநிலையில் உள்ள பொருள் ஒன்றின் மீது சமமதிப்புள்ள அல்லது சம மதிப்பற்ற விசைகள் இணையாகவோ அல்லது எதிர் இணையாகவோ செயல்பட்டால், அப்பொருளின் மீது செயல்படும் மொத்த வலஞ்சுழி திருப்புத் திறனும், மொத்த இடஞ்சுழி திருப்புத் திறனும் சமமாக இருக்கும்.<br>(அல்லது)<br>வலஞ்சுழி திருப்புத் திறன் = இடஞ்சுழி திருப்புத்திறன்<br>$\mathbf{F_1 x d_1 = F_2 x d_2}$ | 2 |
| | **(அல்லது)** | |
| **33.ஆ (i)** | கடத்தி ஒன்றின் ஒரு பகுதியின் வழியே மின்னூட்டங்கள் பாயும் வீதம் மின்னோட்டம் என வரையறுக்கப்படுகிறது.<br>(அல்லது)<br>$\mathbf{I = Q/t}$ | 2 |
| **(ii)** | a) மின்னோட்டத்தின் SI அலகு ஆம்பியர் (A ) | 1 |
| | b) ஒரு கூலும் மின்னூட்டம் ஒரு விநாடி நேரத்தில் கடத்தியின் ஏதாவது ஒரு குறுக்கு வெட்டுப் பகுதி வழியாக கடந்து செல்லும் போது அக்கடத்தியில் பாயும் மின்னோட்டம் ஒரு ஆம்பியர்<br>(அல்லது)<br>$1 \text{ ஆம்பியர்} = \frac{1 \text{ கூலும்}}{1 \text{ வினாடி}}$ | 2 |
| **(iii)** | அம்மீட்டர் | 1 |
| | ஒரு மின்சுற்றில் **தொடர் இணைப்பில்** இணைக்கப்பட வேண்டும். | 1 |

**34.அ (i)**

| | ஈரம் உறிஞ்சும் சேர்மங்கள் | ஈரம் உறிஞ்சிக் கரையும் சேர்மங்கள் |
|---|---|---|
| 1) | வளிமண்டலக் காற்றிலுள்ள ஈரத்தை உறிஞ்சுகிறது. ஆனால் கரைவதில்லை | வளிமண்டலக் காற்றிலுள்ள ஈரத்தை உறிஞ்சிக் கரைகிறது. |
| 2) | வளிமண்டலக் காற்றுடன் தொடர்பு கொள்ளும் போது தன்னுடைய இயற்பியல் நிலையை இழப்பதில்லை | வளிமண்டலக் காற்றுடன் தொடர்பு கொள்ளும் போது தன்னுடைய இயற்பியல் நிலையை இழக்கிறது. |
| 3) | படிக உருவமற்ற திண்மங்களாகவோ திரவங்களாகவோ காணப்படுகின்றன | படிகத் திண்மங்களாக மட்டுமே காணப்படுகின்றன. |
| 4) | எ.கா. சிலிகா ஜெல் (ஏதேனும் ஒரு ஈரம் உறிஞ்சும் சேர்மங்கள்) | எ.கா. NaOH, KOH (ஏதேனும் ஒரு ஈரம் உறிஞ்சி கரையும் சேர்மங்கள்) |

**(ஏதேனும் மூன்று)** 3

**(ii)** குளிர் பிரதேசங்களில் உள்ள நீர் நிலைகளில் அதிக அளவு ஆக்ஸிஜன் கரைந்துள்ளது. ஏனெனில் வெப்பநிலை குறையும் போது ஆக்ஸிஜனின் கரைதிறன் அதிகரிக்கிறது. 2

**(iii)** ஒரு கரைசலில் உள்ள கரைபொருளின் கனஅளவை சதவீதத்தில் குறித்தால் அது அக்கரைசலின் கன அளவு சதவீதம் என வரையறுக்கப்படுகிறது. 2

(அல்லது)

$$\text{கன அளவு சதவீதம்} = \frac{\text{கரைபொருளின் கன அளவு}}{\text{கரைசலின் கன அளவு}} \times 100$$

(அல்லது)

$$\text{கன அளவு சதவீதம்} = \frac{\text{கரைபொருளின் கன அளவு}}{(\text{கரை பொருளின் கன அளவு} + \text{கரைப்பானின் கன அளவு})} \times 100$$

**(அல்லது)**

**34.ஆ (i)**

| | மீள்வினை | மீளாவினை |
|---|---|---|
| 1. | மெதுவாக நடைபெறும் | வேகமாக நடைபெறும் |
| 2. | சமநிலையை அடையும் | சமைநிலையை அடையாது |
| 3. | முன்னோக்கு மற்றும் பின்னோக்கு வினைகள் நடைபெறும் | முன்னோக்கு வினைகள் மட்டும் நடைபெறும் |
| 4. | முன்னோக்கு மற்றும் பின்னோக்கு வினைகள் ஒரே நேரத்தில் நடைபெறும் | ஒரே திசையில் மட்டுமே நடைபெறும் |
| 5. | வினைபடு பொருள்கள் முழுவதும் வினைவிளை பொருள்களாக மாற இயலாது | வினைபடு பொருள்கள் முழுவதும் வினை பொருள்களாக மாறக் கூடியது. |

**(ஏதேனும் நான்கு)** — 4

**(ii)** A – கால்சியம் கார்பனேட் (or) $CaCO_3$
B – கால்சியம் ஆக்சைடு (or) CaO
C – கார்பன் டை ஆக்சைடு (or) $CO_2$ — 3

**35.அ (i)**

| | திசுக்கள் | ஒரு விதையிலைத் தாவரவேர் | இரு விதையிலைத் தாவரவேர் |
|---|---|---|---|
| 1. | சைலக் கற்றைகளின் எண்ணிக்கை | பலமுனை சைலம் | நான்கு முனை சைலம் |
| 2. | கேம்பியம் | காணப்படவில்லை | இரண்டாம் நிலை வளர்ச்சியின் போது மட்டும் கேம்பியம் காணப்படுகிறது. |
| 3. | இரண்டாம் நிலை வளர்ச்சி | இல்லை | உண்டு |
| 4. | பித் (அல்லது) மெடுல்லா | உண்டு | இல்லை |
| 5. | இணைப்புத் திசு | ஸ்கிளிரன்கைமா | பாரன்கைமா |
| 6. | எ.கா. | சோளம் | அவரை |

**(ஏதேனும் நான்கு)** — 4


**(ii)**

| காற்று சுவாசம் | காற்றில்லா சுவாசம் |
|---|---|
| ஆக்ஸிஜன் உதவியால் நடைபெறுகிறது | ஆக்ஸிஜன் இல்லாத நிலையில் நடைபெறுகிறது |
| உணவானது ஆக்ஸிகரணமடைந்து கார்பன் டை ஆக்ஸைடு, நீர் மற்றும் ஆற்றலாக மாறுகிறது | குளுக்கோஸானது எத்தனாலாகவும் அல்லது லேக்டிக் அமிலாமாகவும் மாற்றப்படுகிறது. |
| இது பெரும்பாலான தாவரங்கள் மற்றும் விலங்குகளில் நடைபெறுகிறது | இது சில பாக்டீரியா மற்றும் ஈஸ்டுகளில் நடைபெறுகிறது |
| மூன்று படிநிலைகளில் நடைபெறுகிறது. | எளிய முறையில் நடைபெறுகிறது. |
| $C_6H_{12}O_6+6O_2 \rightarrow 6CO_2+6H_2O+ATP$(ஆற்றல்) | $C_6H_{12}O_6 \rightarrow 2Co_2$ $2C_2H_5OH+ATP$(ஆற்றல்) |

**(ஏதேனும் மூன்று)** — 3

**(அல்லது)**

**35. ஆ (i)**




2

<u>அமைப்பு</u>

❖ சகோதரி குரோமேட்டிடுகள் எனப்படும் இரண்டு ஒத்த இழைகளை உள்ளடக்கிய மெல்லிய நீண்ட நூல் போன்ற அமைப்பு குரோமோசோம்கள் ஆகும்.

❖ சென்ட்ரோமியர், இரண்டு குரோமேடிட்டுகளையும் ஒரு குறிப்பிட்ட புள்ளியில் ஒன்றாக இணைக்கிறது.

❖ குரோமேட்டிடுகள் திருகு போல சுருட்டப்பட்ட மெல்லிய குரோமோனீமாவால் ஆனது. இது தன் முழு நீளத்திற்கும் எண்ணற்ற மணி போன்ற குரோமோமியர்களைக் கொண்டுள்ளது.

❖ குரோமோசோம்கள் டி.என்.ஏ, ஆர்.என்.ஏ குரோமோசோம் புரதங்கள் (ஹிஸ்டோன் மற்றும் ஹிஸ்டோன்அல்லாதவை) மற்றும் சில உலோக அயனிகள் ஆகியவற்றைக் கொண்டது. இந்தப் புரதங்கள் குரோமோசோம் கட்டமைப்பிற்கு ஆதாரமாக விளங்குகின்றன.

<u>முதன்மைச் சுருக்கம்</u>

3

- (சென்டிரோமியர்) குரோமோசோமின் இரண்டு கரங்களும் இணையும் புள்ளி சென்ட்ரோமியர்.
- செல் பிரிதலின்போது ஸ்பின்டில் நார்கள் குரோமோசோம்களுடன் இணையும் பகுதி சென்ட்ரோமியர்.

<u>இரண்டாம் நிலைச் சுருக்கம்</u>

- சில குரோமோசோம்களின் ஏதேனும் சில பகுதிகளில் இரண்டாம் நிலை சுருக்கம் காணப்படும். இது உட்கருமணி உருவாக்கும் பகுதி என அழைக்கப்படும்.

<u>டீலோமியர்</u>

- குரோமோசோமின் இறுதிப் பகுதி குரோமோசோம்களுக்கு நிலைப்புத் தன்மையை அளிக்கிறது.
- இது அருகிலுள்ள குரோமோசோம்கள் ஒன்றுடன் ஒன்று சேர்வதை தடுக்கிறது.

<u>சாட்டிலைட்</u>

. குரோமோசோமின் ஒரு முனையில் காணப்படும் நீண்ட குமிழ் போன்ற இணையுறுப்பு சாட்டிலைட் ஆகும். சாட்டிலைட்டை பெற்றுள்ள குரோமோசோம்கள் சாட்–குரோமோசோம்கள் என அழைக்கப்படுகின்றன.

**(ii)** <u>உடல் செல் ஜீன் சிகிச்சை</u>

உடல் செல்களில் திருத்தப்பட்ட ஜீன்கள் இடம் மாற்றப்படுதல் உடல செல் ஜீன் சிகிச்சை எனப்படும். உடல செல்களில் செய்யப்படும் ஜீன் திருத்தம் அந்த திருத்தம் செய்யப்படும் நோயாளிக்கு மட்டுமே நன்மை பயக்கும். அத்திருத்தம் அடுத்த தலைமைமுறைக்கு எடுத்து செல்லப்படுவதில்லை.

2

<u>இனச்செல் ஜீன் சிகிச்சை</u>

கருநிலை அல்லது இனப்பெருக்க செல்களில் (விந்து மற்றும் அண்ட செல்) திருத்தப்பட்ட ஜீன்கள் இடம் மாற்றப்படுதல் இன செல் அல்லது கருநிலை செல் ஜீன் சிகிச்சை எனப்படும்.